# 9

# கரிசனைப்பட்ட ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 6:1-7)

எழுத்தாளர்கள் கதைகளின் நீளத்திற்கு தக்கதாக அதை வகைப்படுத்துகின்றனர். சில "சிறு கதைகள்" என அழைக்கப்படுகின்றன. கதைகள் *மிகவும்* சிறியவைகளாக இருந்தால், அவைகள் "சிறிய சிறு கதைகள்" என அழைக்கப்படுகின்றன. இந்தப் பாடம், அரசின் உயர் அதிகாரிகளுடன் கொண்டிருந்த செயல்பாடுகள் தொடர்பாக நீண்ட விபர பதிவுகளை கொண்ட எலிசாவைப் பற்றிய ஒரு "சிறிய சிறு கதையை" மையமாகக் கொண்டுள்ளது. இது முந்திய பாடத்தோடு சரியாய் பொருந்துவதால், நமது பாடவரிசையில் இதை நான் இங்கே வைத்துள்ளேன். நான் அந்த பாடத்தை "பகிர்ந்து கொண்ட ஒரு மனிதன்" என அழைத்தேன் மற்றும் இந்தப் பாடத்தை "கரிசனைப்பட்ட ஒரு மனிதன்" என அழைக்கிறேன்.

இது சுருக்கமான ஒரு பதிவாக இருக்கிறபடியாலும் மற்றும் "முக்கியத்துவம் இல்லாத" ஒரு பிரச்சனையைப் பற்றி பேசுவதாக கருதப்படுவதாலும் இது, "எலிசாவை பற்றி சொல்லப்பட்டுள்ள கதைகளில் மிகவும் அற்பமான கதை" என அழைக்கப்பட்டது உண்டு.[1] எலிசாவின் வாழ்வு பற்றிய சில தொகுப்புகள் இந்த கதையைப் பற்றி கருத்து எதுவும் கூற விரும்பவில்லை, மற்றவைகள் ஓரிரு வார்த்தைகள் கூறிவிட்டு அப்படியே விட்டுவிட்டார்கள். இருப்பினும், பர்டன் கோப்மேன் என்பவரின் கூற்றுப்படி, "அந்த புகழ்மிக்க தீர்க்கதரிசி செய்த அற்புதங்களிலேயே இது மிகவும் முக்கியமான ஒரு அற்புதமாய் இருக்கிறது, ஏன்? இது ஏழை மக்களின் இருதயங்களை அழுத்திக்கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கான தேவனுடைய கரிசனையை வலியுறுத்துகிறது."[2]

## ஒரு "அற்பமான" பிரச்சனை, அப்படித்தானே!

### மனிதன் என்ன செய்யக்கூடும்

நம்முடைய கதை துவங்குகையில், எலிசா மறுபடியும் எரிகோவின் தீர்க்கதரிசிகள் பள்ளியில் "தீர்க்கதரிசிகளின் புத்திரரோடு" இருந்தார் (காண்க 2:5), இந்தப்பட்டணம் யோர்தான் நதிக்கு அருகில் இருந்தது (காண்க 6:2). எலிசாவின் ஊழியம் எந்த அளவு வெற்றி பெற்றிருந்தது என்பது, அவருடைய மாணவர்கள் தங்கும் விடுதியில் இட வசதி போதவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் எண்ணிக்கை பெருகியிருந்தது தெளிவாக காட்டுகிறது. "தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது" என்றார்கள் (6:1). திருமணமாகியிருந்த மாணவர்கள் அநேகமாக தனி குடியிருப்புகளில் தங்கினார்கள் (காண்க 4:1-7), ஆனால் திருமணமாகாத தீர்க்கதரிசிகள் ஒன்றாக வாழ்ந்திருக்கலாம். குறைந்த பட்சம், அவர்களுக்கு ஒரு பொது கூடுகை இடம்

*மற்றும் உணவு உண்ணும் அறை இருந்தது (காண்க 4:38-44). அந்தக் கட்டிடம் அவர்கள் எண்ணிக்கைக்கு போதுமானதாக இருக்கவில்லை. இது ஒரு நல்ல பிரச்சனை தான், ஆனால் வளர்ச்சி தொடரவேண்டுமானால், இது உடனே தீர்க்கப்பட வேண்டும்.*

*பயிற்சி தீர்க்கதரிசிகளிடத்தில் ஒரு ஒப்பந்ததாரரை அமர்த்தி பெரிய வசதியான ஒரு கட்டிடத்தை கட்டுமளவுக்கு நிதிவசதி இருக்கவில்லை. அப்படியானால், இந்த பிரச்சனை எப்படித் தீர்க்கப்படமுடியும்? அவர்களே அதை கட்டிக்கொள்ள வேண்டும். அவர்கள் எலிசாவை நோக்கி, "நாங்கள் யோர்தான் மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம்" என்றார்கள் (வசனம் 2அ). பண்டைக்கால எழுத்தாளர்கள் கூற்றுப்படி, யோர்தான் நதிக்கரையில் வில்லோ, பாப்லோர் மற்றும் டாமரிக்ஸ் போன்ற மரங்கள் மற்றும் புதர்கள் அதிக அளவில் இருந்தன.[3] அந்த மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்திருந்த காரணத்தால், தாங்கள் உடல் உழைப்பு கைவேலை செய்யக் கூடாத அளவுக்கு தாங்கள் "பெரியவர்கள்" என அவர்கள் சிந்திக்கவில்லை என்பதை கவனியுங்கள். அநேக ஆராதனை கூடங்கள் அதை யார் பயன்படுத்துவார்களோ அவர்களாலே கட்டப்பட்டுள்ளன.*

*எலிசா அவர்களை பார்த்து, "போங்கள்" என்றான் (வசனம் 2ஆ). ஆனால் மாணவர்களில் ஒருவன் அவரும் தங்களோடு வரும்படி கேட்டுக்கொண்டான் அவர்களில் ஒருவன்: "நீர் தயவு செய்து உமது அடியாரோடே வரவேண்டும்" என்றான் (வசனம் 3அ). அந்த வேண்டுகோள் மரியாதை மற்றும் பாசத்தைச் சுட்டிக்காட்டுகிறது. (சில ஆசிரியர்கள் தங்களோடிருப்பதை மாணவர்கள் விரும்பி ஏற்க மாட்டார்கள்.) அதற்கு தீர்க்கதரிசி, "நான் வருகிறேன்" என்று சொல்லி, "அவர்களோடே கூடப்போனான்" (வசனங்கள் 3ஆ, 4அ).*

*அவர்கள் யோர்தான் நதியை அடைந்தபோது, அவர்கள் தங்களுக்கு மரத்தாலான ஒரு அறை வீட்டைக் கட்டுவதற்கு, "மரங்களை வெட்டினார்கள்" (வசனம் 4ஆ) அநேகமாக, எலிசாவும் அந்த மாணவர்களோடு சேர்ந்து வேலை செய்தார். கடந்த காலத்தில், சுவிசேஷ ஊழியர்கள் விவசாய சமூகங்களில் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்திய போது, பகல் நேரங்களில் அவர்கள் வயல்களில் வேலை செய்துவிட்டு, இரவு நேரங்களில் பிரசங்கம் செய்தார்கள்.*

### மனிதனால் செய்ய முடியாதது

*கோடாரிகளின் சத்தத்தை நான் கேட்கிறேன், மற்றும் மாணவர்களின் நெற்றியில் வியர்வை வழிவதையும் பார்க்கிறேன். திடீரென, அவர்களில் ஒருவனிடமிருந்து ஒரு கூக்குரல் வருகிறது. "ஒருவன் ஒரு உத்திரத்தை (அதை செய்வதற்கான மரம்) வெட்டி விழுத்துகையில் கோடாரி தண்ணீரில் விழுந்தது" (வசனம் 5அ). இது அரிதாக நடக்கிற காரியம் அல்ல (காண்க உபாகமம் 19:4, 5); சாதாரணமாக, அது ஒரு பிரச்சனையை ஏற்படுத்தாது. நான் விடலைப்பருவத்தி லிருந்தபோது, அடுப்பெறிக்க விறகு வெட்டவேண்டியிருந்தது. எனது கோடாரி எப்போதாவது அதன் கைப்பிடியிலிருந்து கழன்று விழுந்திருக்கிறது. நான் அதை கண்டுபிடித்து, கைப்பிடியில் பாதுகாப்பாக "பொருத்தி," மீண்டும் மரம் வெட்டியிருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில், பயிற்சியாளர் யோர்தான் நதி யின் ஓரத்தில் மரம் வெட்டிக்கொண்டிருந்தார் மற்றும் "கோடாரி தண்ணீரில்*

[குழம்பிய நீர்] விழுந்தது" (2 இராஜாக்கள் 6:5ஆ). அந்த மனிதன் எலிசாவை நோக்கி, "ஐயோ என் ஆண்டவனே! அது இரவலாக வாங்கப்பட்டதே" என்று கூவினான் (வசனம் 5இ).

உங்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சனையாக தோன்றலாம் அல்லது அப்படி தோன்றாமலும் இருக்கலாம், ஆனால் அந்த மனிதனுடைய இடத்திலிருந்து அந்த சூழ்நிலையை பாருங்கள். அவன் அருகாமையிலுள்ள இரும்பு கடைக்கு சென்று, வேறு ஒரு கோடாரியை வாங்கிவந்து, காணாமற்போனதற்கு பதிலாக அதை பொருத்துவதற்கான சாத்தியம் இல்லாமல் இருந்தது. அந்த தேசத்தில் இரும்பு சாமான்களின் பற்றாக்குறை இருந்தது (காண்க 1 சாமுவேல் 13:22), மற்றும் அவைகள் அதிக விலையுள்ளவைகளாயிருந்தன. கோடாரிகள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்திருந்தாலும், நிச்சயமாக பொருத்துவதற்கு இந்த மனிதனால் ஒரு மாற்று கோடாரியை வாங்கி இருந்திருக்க முடியாது. அவன் கோடாரியை இரவல் வாங்கவேண்டிய அவசியத்தில் இருந்தான். "இரவல் வாங்கினான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை அவன் "கெஞ்சினான்" என பொருள்படும். அந்த கோடாரியை அவன் இரவல் வாங்குவதற்கு முன்பாக, அந்த எஜமான உரிமையாளரை *கெஞ்ச*வேண்டியிருந்தது - இப்போது அது போய்விட்டது!

இன்று சிலர் தாங்கள் இரவல் வாங்கும் பொருட்களைக் குறித்து கவலையீனமாக இருக்கிறார்கள், ஆனால் மோசேயின் பிரமாணம் இரவல் வாங்குவதை கடுமையாக கருதியது. ஒரு மனிதன் இரவல் வாங்கினது தொலைந்து போனால், அதற்கு அவன் பதிலீடு செய்ய வேண்டும் (காண்க யாத்திராகமம் 22:14) - வருமையில் வாடின இந்த மாணவரால் அதை செய்வது சாத்தியமில்லாததாக இருந்தது. இப்படியாக, "ஒரு கொத்தடிமையாக வேலை செய்து அந்த பொருளின் மதிப்பை ஈடு செய்யும் சூழ்நிலையை அவன் சந்திக்க வேண்டியவனாக இருந்தான்."[4] ஆமோஸ் 2:6ன்படி இஸ்ரவேலின் அவபக்தியுள்ள ஜனங்கள் மனித வியாபாரம் செய்யக்கூடியவர்களாக "எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கு" விற்கக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த இளம் மனிதனுக்கு இது ஒரு நிஜமான மற்றும் கடுமையான பிரச்சனையாகவிருந்தது. ஆகவே அவன் எலிசாவிடம் கதறினான்.

எலிசா அந்த மனிதனிடம், "அது எங்கே விழுந்தது?" என்று கேட்டான் (2 இராஜாக்கள் 6:6அ). கர்த்தர் சில சமயங்களில் தீர்க்கதரிசிக்கு இயற்கைக்கு மேம்பட்ட அறிவை புரிந்துகொள்ளுதலை கொடுத்திருந்தார் (5:25, 26; 6:8-12), சிலசமயம் அவர் அதை கொடுக்கவில்லை (4:27). கர்த்தர் தீர்க்கதரிசிக்கு அதை இயல்பான விதத்தில் அவர் தேடி எடுக்கக்கூடிய தகவல்களை கொடுக்கவில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட மாணவனிடம் கோடாரி தண்ணீரில் எங்கே விழுந்தது என்று கேட்டார்.

அந்த மனிதன் தண்ணீர் தெறித்து விழுந்த இடத்தைக் காண்பித்தான். "அவன் அந்த இடத்தைக் காண்பித்த போது, [எலிசா] ஒரு கொம்பை வெட்டி [அருகிலிருந்த மரத்திலிருந்து] அதை அங்கே [காண்பிக்கப்பட்ட இடத்தில்] எறிந்தான்" (6:6ஆ). அவன் அதை செய்தபோது, ஒரு அதிசயமான காரியம் நடந்தது: வசனப்பகுதி அந்த செயலை, "அந்த இரும்பை மிதக்கப்பண்ணி" என அழைக்கிறது (வசனம் 6இ).

யோர்தான் நதியில் அந்த நாளில் என்ன நடந்ததோ அதற்கான அறிவுப்பூர்வ

மான விளக்கத்தைக் கண்டுபிடிக்க அவிசுவாசிகள் போராடியிருக்கிறார்கள். அவர்கள் எலிசா ஏதோ ஒருவிதத்தில், அந்த தடியின் உதவியால், "கோடாரியை" "தூண்டில் போட்டு பிடிப்பதுபோல்" வெளியே எடுத்துவிட்டார் என்ற ஆலோசனையை முன்வைக்கிறார்கள்.[5] ஜீ. ராலின்சன் என்பவருடைய பதில் சரியாயிருக்கிறது: "பரிசுத்த எழுத்தாளர்கள் அது கையினால் எவ்வளவு லாவக மாக செய்யப்பட்டதென்ற விபரத்தை எழுதிவைக்க அக்கறைப்படவில்லை."[6]

ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளரின் மொழிநடை தெளிவாக உள்ளது: கடினமான, கெட்டியான இருப்பு கோடாரி *மிதந்தது!* அது தண்ணீரிலிருந்து வெளிவந்து ஒரு மிதவையை போல மிதந்தது! நான் ஆறுகளில் சில பாறைகளை வீசியிருக்கிறேன், அவைகளில் எதுவும் ஒரு போதும் மேலே மிதந்து வரவில்லை. எனது கையிலிருந்து இரண்டொரு கம்பிகள் நழுவி தண்ணீரில் விழுந்துவிட்டன, நான் அவைகளை ஒருபோதும் திரும்ப பார்க்கவில்லை. இது ஒரு உண்மையான அற்புதமாக இருந்தது என்பதை சந்தேகிக்க வேண்டாம். இது ஒரு அமைதியான, எளிய, பாசாங்கு இல்லாத, நிச்சயமான அற்புதமாக இருந்தது, இருப்பினும் ஒரு அற்புதமாகவே இருந்தது!

அவருடைய வழக்கத்தின்படி, எலிசா அற்புதத்தின் பயனாளியை அதில் ஈடுபடுத்தினார். அவர் அந்த வாலிபனை நோக்கி, "அதை எடுத்துக்கொள்" என்றான் (வசனம் 7அ). அந்த வகையில், இயற்கையின் விதிகள் அதில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதை அந்த மனிதன் அறிந்து கொள்வான். அந்த மாணவன் தண்ணீருக்குள் சென்று "தன் கையை நீட்டி அதை எடுத்துக் கொண்டான்" (வசனம் 7ஆ). அவன் தன் நன்றியறிதலை தெரிவித்த பிறகு, கோடாரியை பொருத்திக் கொண்டு மீண்டும் வேலைக்குச் சென்றான் - இம்முறை ஆற்றிலிருந்து தொலைவில் இருந்த ஒரு மரத்தை வெட்டிச்சென்றான்!

## இன்றைய "அற்பமான" பிரச்சனைகள்

இது ஒரு அற்பமான பிரச்சனை, இதை கர்த்தரிடத்தில் எடுத்துச் செல்ல தேவையில்லை என நீங்கள் உணருவது சாத்தியமானதா? "அவர் முழு உலகைப் பற்றியும் கரிசனை உடையவராக இருக்கிறார் மற்றும் அவர் தேசிய பிரச்சனைகள் மற்றும் சர்வதேச நெருக்கடிகளை கையாள வேண்டியிருக்கிறது, ஆகவே என்னுடைய சிறிய போராட்டங்களுக்காக அவரை சிரமப்படுத்துவது அவசியமற்றதாக இருக்கும்" என நீங்கள் சிந்தித்திருக்கலாம். நமது கதையிலிருந்து இதை கற்றுக்கொள்ளுங்கள், அவருடைய பிள்ளைகளுக்கு எது கரிசனையாக இருக்கிறதோ அது தேவனுக்கும் கரிசனையுள்ளதாக இருக்கிறது.

இதை நான் எழுதும் போது, எனது மனைவியும் நானும் எங்கள் மகள் ஏஞ்சி, அவள் கணவர் டேன் மற்றும் அவர்கள் புதிதாய் தத்தெடுத்துள்ள குழந்தை எலியா ஆகியோரோடு நேரம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வப்போது, எலியா அழுகிறான் (குழந்தைகள் செய்வதுபோல). ஒருவேளை அவன் பசியாக இருக்கலாம் அல்லது அவன் தன் கால் உடை மாற்றப்பட விரும்புகிறான் அல்லது அழவேண்டும் போலிருந்து அழுகிறான். அவனுடைய தாயும் தந்தையும் "இது அழுவதற்கு அற்பமான காரணம்" என்று சொல்லி, அவனை திட்டினார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்பது உங்களுக்கு தெரியும். அவர்கள் தங்கள் கரங்களில் அவனை ஏந்திக்கொண்டு, ஆறுதல்படுத்தி, அவனுடைய தேவைகள் எவ்வளவு

*"சிறிதாக" இருந்தாலும் அவைகளைச் சந்திக்கிறார்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1அ).*

*உலகத்தை கவனித்துப் பாருங்கள். தேவன் "பெரிய" காரியங்களுக்காக எவ்வளவு கரிசனைப்படுகிறாரோ, அவ்வளவாய் "சிறிய" காரியங்களுக்காகவும் கரிசனைப்படுகிறார். "வானத்திலுள்ள மிகவும் அற்புதமான நட்சத்திரம் எப்படி கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதோ, அதே கவனத்தோடு ஒரு வண்ணத்து பூச்சியின் சிறகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன"[7] இதை நின்று சிந்தித்துப் பாருங்கள்: உண்மையில், உலகளாவிய பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சனைகள் உட்பட, எந்த பிரச்சனையும் கர்த்தருக்கு "பெரிய" பிரச்சனை அல்ல. அவிசுவாசி சந்திக்கும் "உலகை உலுக்கும்" பிரச்சனையைவிட, ஒரு விசுவாசி சந்திக்கும் "அற்பமான" பிரச்சனை தேவனுக்கு அதிக கரிசனையானதாயுள்ளது.*

*சிலர் "அற்பமானவை" என வகைப்படுத்தும் பிரச்சனை உட்பட* ஒவ்வொரு *பிரச்சனையையும் அவரிடம் எடுத்துச் செல்லும்படி வசனத்திற்கு வசனம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல்,* __எல்லாவற்றையுங்குறித்து__ *உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்றார் (பிலிப்பியர் 4:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அப்போஸ்தலனாகிய பேதுரு, "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை*யெல்லாம் *அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

## முடிவுரை

*நீங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்களானால், நீங்கள் கொண்டிருக்கும் எந்த பிரச்சனையையும் கர்த்தர் "அற்பமானதாக" எண்ணுவது இல்லை. "நாம் தேவனை நேசித்து, அவரை விசுவாசிப்போமானால், அவரிடம் உதவி கேட்டு ஜெபிக்கும் மிக தாழ்மையான ஜெபத்திற்குக் கூட பதிலளித்து, நமது மிகச் சிறிய தேவையைக் கூட நிறைவேற்றுவார்."[8]*

*தேவன் சிறப்பான தொடுவிதத்தில் நமது* ஆவிக்குரிய *பிரச்சனைகளைக் குறித்து - அவைகள் உலக சிந்தையுள்ளவர்களுக்கு எவ்வளவு "சிறிதாக" தோன்றினாலும், அவைகளின் மேல் அதிக கரிசனையுள்ளவராக இருக்கிறார். ஒரு ஆவிக்குரிய பிரச்சனை உங்களை வலுவாக இழுத்து கீழே தள்ளிக் கொண்டிருந்தால், தேவன் உங்களை தூக்கி எடுத்து நிறுத்தும்படியாக, நீங்கள் மனந்திரும்புதலோடும் மற்றும் தாழ்மையோடும் இன்றே அவரிடம் ஓடிச்செல் வீர்கள் என்று நான் ஜெபிக்கிறேன். கோடாரியை மிதக்கச் செய்தவர், உங்கள் பாவங்களை மேலே, தொலைவில் "பறந்து" போகச் செய்வார்!*

---

குறிப்புகள்

[1]Robert C. Dentan, "Kings," *Layman's Bible Commentary,* vol. 7 (Richmond, Va.: John Knox Press, 1964), 83. [2]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 77. [3]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M.

Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 119. Rawlinson cited Josephus *Wars* 4.8.3 and Strabo *Geography* 15.1.2.41. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 533. The same idea is suggested J. H. Stek, "Elisha," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:71. [5]*எலிசா கோடாரியைப் பார்க்குமளவுக்கு தண்ணீர் தெளிவாக இருந்தது என சில "விளக்கங்கள்" யூகிக்கின்றன. அப்படி இருந்திருந்தால், மாணவர் தானே அதை எடுத்திருப்பார்.* [6]Rawlinson, 120. [7]Adapted from J. G. B., *Short Meditations on Elisha* (New York: Loizeaux Brothers, n.d.), 39. [8]Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 43.